## சென்னை ஓபன் டபிள்யு.டி.ஏ.– 250 சர்வதேச பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப்

# 2025 அக்டோபர் 27-ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 2-ஆம் தேதி வரை நடைபெறும்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 19 -**

**சென்னையில், வருகிற அக்டோபர் 27-ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 2-ஆம் தேதி வரை, சென்னை ஓபன் டபிள்யு.டி.ஏ.- 250 சர்வதேச பெண்கள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025 போட்டி நடைபெறும் என, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்தார்.**

**இதுதொடர்பாக சென்னையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்ட அறிவிப்பின் விவரம் வருமாறு :-**

*2025-ஆம் ஆண்டுக்கான சென்னை ஓபன்- சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் குறித்த அறிவிப்பை வெளியிடுவதில் நம் தமிழ்நாடு அரசு பெருமிதம் கொள்கிறது. மூன்று ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, டபிள்யு.டி.ஏ (WTA) சென்னை ஓபன் வருகிற அக்டோபர் 27-ஆம் தேதி முதல் நவம்பர் 2-ஆம் தேதி வரை, சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள புகழ்பெற்ற எஸ்.டி.ஏ.டி (SDAT) டென்னிஸ் மைதானத்தில் நடைபெற உள்ளது.*

### முதன்மை அரங்கு

*இந்த மைதானத்தின் முதன்மை அரங்கு நமது சரித்திர நாயகர் விஜய் அமிர்தராஜின் பெயரில் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மேம்படுத்தப்பட்ட இந்த மைதானத்துக்கு வர இருக்கும் உலகின் முன்னணி வீராங்கனைகளை வரவேற்க, ஆவலுடன் நாம் காத்திருக்கிறோம். மேலும், முத்தாய்ப்பாக இந்த ஆண்டில், தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் (TNTA) தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இந்த வேளையில், இந்தப் போட்டி தமிழ்நாட்டில் நடப்பது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.*

*இந்தத் தொடரை நடத்துவதற்காக, 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, தொடர்ந்து ஆதரவளித்து வரும் மாண்புமிகு முதலமைச்சருக்கு நமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் “சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025” போட்டி அறிவிப்பு குறித்த செய்தியாளர் சந்திப்பு நிகழ்ச்சி, சென்னையில் நேற்று முன்தினம் (17.7.2025) நடைபெற்றது. இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி. தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் தலைவர் விஜய் அமிர்தராஜ், தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் செயலாளர் பி.வெங்கடசுப்ரமணியம், பொருளாளர் டோட்லா விவேக் குமார் ரெட்டி, போட்டியின் இயக்குநர் ஹித்தன் ஜோஷி உள்பட அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

*இன்று, தமிழ்நாடு இந்தியாவின் முன்னணி விளையாட்டு மாநிலமாக உருவெடுத்து, தொடர்ந்து பல்வேறு தேசிய, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது. நமது திராவிட மாடல் அரசு, சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளை ஊக்குவிப்பதிலும், இந்திய விளையாட்டு வீரர்களின் திறமைகளை வளர்த்தெடுப்பதிலும், எப்போதும் உறுதியுடன் இருந்து வருகிறது.*

### திராவிட மாடல் அரசு

*சென்னையில் நடைபெறவுள்ள ஏ.டி.பி (ATP) சேலஞ்சர் டூர் போட்டிக்கு ஒரு கோடி ரூபாயை நமது திராவிட மாடல் அரசு ஒதுக்கியுள்ளது. 2025-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விளையாட்டுக்கு மிகச் சிறப்பான ஆண்டாக அமைய உள்ளது. ஏற்கனவே ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை விளையாட்டுப் போட்டி மற்றும் ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப் போட்டி -2025 ஆகியவற்றை அறிவித்துள்ளோம். தற்போது, சென்னை ஓபன் டபிள்யு.டி.ஏ. (WTA)-வின் பிரமாண்டமான மறுவரவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இது ஒரு தொடக்கமே - மேலும் பல அற்புதமான சர்வதேச நிகழ்வுகள் வர இருக்கின்றன. இவை வரவிருக்கும் ஆண்டை உற்சாகமானதாக மாற்றும். ஆக்டகன் (Octagon) மற்றும் டபிள்யு.டி.ஏ. (WTA) சென்னையின் மீதும் இந்தியாவின் மீதும் வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*விளையாட்டை ஊக்குவிப்பதிலும், வீரர்-வீராங்கனைகளின் சாதனைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, பொதுமக்களின் பங்கேற்பை ஊக்கப்படுத்துவதிலும் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானது. உங்களின் இந்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.*

### வீராங்கனைகளின் திறமை

*2025 - சாம்பியன்ஷிப் மிகப் பிரமாண்டமாகவும் சிறப்பாகவும் இருக்கும். உலகின் முதல் 100 தரவரிசை வீராங்கனைகள் இதில் பங்கேற்க உள்ளனர். இந்தத் தொடர், ரசிகர்களை ஈர்ப்பதுடன், நம் நாட்டு வீராங்கனைகளின் திறமைகளை மேம்படுத்தி, தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் இளம் வீராங்கனைகளுக்கு உத்வேகமாகவும் இருக்கும்.*

*தமிழ்நாடு அரசு சார்பாக, வீராங்கனைகள், ரசிகர்கள், ஸ்பான்ஸர்கள் மற்றும் டென்னிஸ் சமூகத்திற்கும் மறக்க முடியாத அனுபவத்தை வழங்குவதற்காக, ஒவ்வொரு வேலையும், துல்லியமாகத் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும் என உறுதியளிக்கிறோம். உங்கள் ஒவ்வொருவரையும் இந்த விழாவில் பங்கேற்க அழைக்கிறோம்.*

*இந்த சர்வதேச நிகழ்விற்குப் பரவலாக கவனத்தைக் கொண்டுவர ஊடகங்கள் தங்களின் சிறப்பான பங்களிப்பைத் தர வேண்டுமென எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றிணைந்து, டபிள்யு.டி.ஏ. (WTA) 250-ஐ ஒரு அற்புதமான வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிகரமான நிகழ்வாக்குவோம். சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கான உலகத்தரம் வாய்ந்த இடமாக, தமிழ்நாட்டைத் தொடர்ந்து திகழச் செய்வோம்.*

*இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.*

### பங்கேற்றவர்கள்

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் - செயலர் ஜே.மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ், தமிழ்நாடு டென்னிஸ் அசோசியேஷனின் தலைவர் விஜய் அமிர்தராஜ் மற்றும் மதிப்புறு இயக்குநர் வெங்கட சுப்பிரமணியம், ஆகியோருடன் அதிகாரிகள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.*

